முக்குலத்தோர் இனம்

*576. திரு. பி. என். வல்லரசு:
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கள்ளர், மறவர், அகமுடையர் என்ற முக்குலத்தோர் இனத்தை தேவர் இனம் என்ற பெயரில் அழைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இது தொடர்பாக, தமிழ்நாடு தேவர் பேரவை மற்றும் தமிழ்நாடு தேவர் (கள்ளர்) இனப்பாதுகாப்பு நடவடிக்கைக்குழு ஆகிய அமைப்புகளிடமிருந்து, கோரிக்கை ஒன்று பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழ்கின்ற கள்ளர், மறவர், அகமுடையர் என்னும் முக்குலத்தோரை தேவர் இனம் என்று அழைக்க வேண்டும் என்று தொடர்ந்து தமிழக அரசை வலியுறுத்தி கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையை குறைந்த பட்சம் மூன்று மாத காலத்திற்குள்ளாவது பரிசீலித்து நல்லதொரு முடிவை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர், மறவர் மற்றும் அகமுடையர் எனும் வகுப்புக்கள் முக்குலத்தோர் என்று சொல்லிக் கொண்ட போதிலும் கூட, அந்த வகுப்புக்கள் தனித் தனியாக சங்கங்கள் அமைத்துச் செயல்பட்டு வருகின்றன என்பது தமிழ் நாடு முதலாவது மற்றும் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுக்களின் அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. கள்ளர் மற்றும் மறவர் வகுப்புக்களிலிருந்து வந்த மனுக்கள் அகமுடையரிடம் உறவு முறை கொண்டாடிய போதிலும், அகமுடையர் வகுப்புப் பிரதிநிதிகள் தனித்தன்மை எண்ணத்தோடு, தாங்கள் தனி வகுப்பாகவே கருதப்பட வேண்டும் என்று விரும்பி மனுக்களை அளித்துள்ளார்கள்.

9-05 மணி

அகமுடையர் வகுப்பின் சார்பில், மதுரை மற்றும் இராமநாத புரம் மாவட்டங்களில், ராஜாராம் பாண்டியன் என்பவர் அளித்த மனுவில், ஆற்காடு முதலியார் மற்றும் துளுவவேளாளர் வகுப்பின ரோடு அவர் உறவு கொண்டாடி, மனுவை வழங்கியுள்ளார். மதுரையில் இக்குழுவின் முன்பாக அளித்த வாய்மொழி சாட்சி யத்தில், கள்ளர், மறவர் ஆகிய இரு வகுப்பினருக்கும் தொடர்பு இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, இப்போது, அவர்களே தனித்தனி அமைப்புகளாக இருக்க வேண்டுமென்று, தனித்தனி அமைப்புகளை, சங்கங்களை அமைத்துக்கொண்டு செயல்படுகிற நேரத்தில், அது பரிசீலனைக்கு உரிய ஒன்றாக இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே கூறுவதுபோல, அவ்வளவு விரைவில் அரசு முடிவு அறிவிக்கக் கூடியதாக இல்லை.

திரு. பி. என் வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டநாதக் கரையாளர் பிற்பட்டோர் நலக் குழு விலும், அம்பாசங்கர் பிற்பட்டோர் நலக் குழுவிலும், அன்றைய தினம் முக்குலத்தோர் தனி இனம் என்று குறிப்பதாகக் கூறி யிருக்கிறார்கள். ஆனால், இப்போது கால வளர்ச்சியில் மூன்று இனமும் ஒரே இனம் என்று அறிவிக்க வேண்டுமென்று பல மா நாடுகள் நடத்தி, ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானம் போட்டு, அரசுக்குக் கூட அனுப்பியிருக்கிறார்கள். இன்றைய தினம், 3 இனங்களையும் ஒரே இனமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைதான் பரவலாக இருக்கிறது. எனவே, தமிழக முதல் வர் அவர்கள், மறு பரிசிலனை செய்து, கள்ளர், மறவர், அக முடையோர் எனும் குலத்தவரை, தேவர் இனம் என்று அழைக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒரு முக்கியமான திருத்தம், சட்டநாதக் கரையாளர் தலைமையில் எந்த ஒரு பிற்பட்டோர் நலக் குழுவும் அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டநாதக் கரையாளர் வேறு; சட்டநாதன் வேறு; அதுமாத்திரமல்ல, சட்டநாதன் என்பவர் வன்னியச் சமு தாயத்தைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கரையாளர் என்று சொல்கிறார். கரை யாளர் இல்லை. அதோடு மட்டுமல்ல; அந்த இரு குழுவின ருடைய அறிக்கைகள் தவறானவை என்பது போல மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது, அவ்வளவு சரியான வாதமாக இருக்க முடியாது. ஏனென்றால், தமிழ்நாடு இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு, தன்னுடைய அறிக்கையில், கள்ளர், மறவர் மற்றும் அகமுடையர் ஆகிய 3 பெரிய ஜாதிகள், தேவர் என்ற ஒரே

வினாக்கள்—விடைகள்.

பொதுப் பெயரின்கீழ் வரவேண்டும் என்று விருப்பம் தெரிவித்து பல கோரிக்கைகள் வந்தன என்றும், தேவர் என்பது பட்டப் பெயரே அன்றி, இது ஒரு ஜாதியின் பெயரே அல்ல; எனவே, இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்வது கடினம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இப்படி, தனித்தனியாக இயங்குகின்ற அமைப்புக் கள் அனைத்தும், ஒன்று சேர்ந்து ஒரு குடையின் கீழ், எங்களை முக்குலத்தோர் என்று அழைக்க வேண்டும் என்று தெரிவித்தால் தான், அது அரசுக்கு எளிமையாக இருக்கும். இல்லையென் றால், அவசரப்பட்டு அறிவித்து விட்டு, மற்றவர்கள் அதிலே இணைய மறுத்தால், பிரச்சினை உருவாக ஏதுவாகும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளர், பறையர், அருந்ததியர் என்ற பிரிவினரை ஒன்றாக ஆக்கி, ஆதி திராவிடர் என்ற ஒரே பிரிவினராக ஆக்கு வதற்கு அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரையும் ஒன்றாக்கி தமிழர் என்ற ஒரே பிரிவிலே கொண்டுவரவேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் மறவர் இனத்ததோர் அகமுடையர் மெல்ல மெல்ல வந்து, வெள்ளாளர் ஆனார் என்று எங்கள் பகுதி யிலே கூறுவார்கள். அவர்களெல்லாம் வெள்ளாளர்களாக ஆகி விட்டு இன்று நூற்றுக்கணக்கான ஜாதிகளும் ஏற்பட்டிருக்கின் றன. அதிலே சில உயர்ஜாதிக்காரர்கள் தலை நிமிர்ந்து, தங் கள் பெயருக்குப் பின்னால், ஜாதியைப் போட்டு அழைக்கப்படு கிறார்கள். எங்களைப் போன்ற தாழ்த்தப்பட்டவர்கள், அவ் வாறு போட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, பெயருக்குப் பின்னால், ஜாதியைப் போடுவதை, இந்த அரசு தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல உண்மையைப் பெண்களிடம் ஆண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பெண்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியின் பெயரைப் போடுவதில்லை.

வி.ஐ.பி.-க்களின் சுற்றுப் பயணம்.

*6633. திரு. எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வி.ஐ.பி.-க்களின் சுற்றுப் பயணத்தின் சமயம் அந்தந்த பகுதியில் உள்ள காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை பாதுகாப்பிற்காக பயன்படுத்துவதை தவிர்க்க அரசிடம் செயல் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?